செ.வெ.எண்: 17 நாள்: 09.02.2018

**புதுக்கோட்டை மாவட்டத்தில் TNPSC குரூப்-4 தேர்வினை 40,910 நபர்கள் எழுத உள்ளனர் - மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ் இ.ஆ.ப., அவர்கள் தகவல்.**

புதுக்கோட்டை மாவட்ட ஆட்சியரக கூட்டரங்கில் தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம் மூலம் 11.02.2018 அன்று நடைபெற உள்ள குரூப்- **IV** தேர்வினை புதுக்கோட்டை மாவட்டத்தில் சிறப்பாக நடத்தும் வகையில் பல்வேறு துறைகளின் மூலம் மேற்கொள்ள வேண்டிய பணிகள் குறித்த ஆலோசனைக் கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்., இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் இன்று (09.02.2018) நடைபெற்றது.

இந்த ஆலோசனைக் கூட்டத்தை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் துவக்கி வைத்து பேசியதாவது.

தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம் மூலம் தமிழகம் முழுவதும் குரூப்-4 தேர்வு 11.02.2018 அன்று நடைபெறவுள்ளது. இந்த குரூப்-4 தேர்வினை புதுக்கோட்டை மாவட்டத்தில் சிறப்பாக நடத்தும் வகையில் பல்வேறு துறைகளின் மூலம் மேற்கொள்ளப்பட வேண்டிய பணிகள் குறித்த ஆலோசனை கூட்டம் துவக்கி வைக்கப்பட்டுள்ளது. இக்கூட்டத்தில் கல்வித் துறை, காவல்த்துறை, கருவூலம், நகராட்சி நிர்வாகம், மின்சார வாரியம், தீயணைப்புத்துறை, போக்குவரத்துறை, வருவாய்த்துறை உள்ளிட்ட பல்வேறு துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

புதுக்கோட்டை மாவட்டத்தில் குரூப்-4 தேர்வினை சிறப்பாக நடத்தும் வகையில் மாவட்டம் முழுவதும் 98 இடங்களில் 136 மையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. தேர்வுகளில் முறைகேடுகளை தடுக்கும் வகையில் 26 நடமாடும் கண்காணிப்புக் குழுக்களும், 24 பறக்கும் படை குழுக்களும், 136 ஆய்வு அலுவலர்களும், 136 தேர்வு முதன்மை கண்காணிப்பாளர்களும் அமைக்கப்பட்டுள்ளனர். மேலும் புதுக்கோட்டை மாவட்டத்தில் குரூப்-4 தேர்வினை எழுத மொத்தம் 40,910 நபர்கள் விண்ணப்பித்துள்ளனர்.

இக்கூட்டத்தில் காவல்துறையினர் குரூப்-4 தேர்வு நடைபெறும் அனைத்து தேர்வுமையங்களுக்கும் போதுமான காவலர்களை பாதுகாப்பு பணிக்கு நியமிக்கவும், குரூப் -4 தேர்விற்கான ஆவணங்கள், கருவூல பாதுகாப்பில் வைக்கப்பட்டு தேர்வுமையங்களுக்கு அனுப்பி மீண்டும் தேர்வு முடிந்தவுடன் விடைத்தாள்கள் அடங்கிய ஆவணங்கள் மீள கருவூலத்திற்கு கொண்டு வந்து ஒப்படைக்கப்படவுள்ளதால் கருவூல அலுவலர்கள் பணியில் இருக்கவும், தேர்வு மையங்களில் சுத்தமான குடிநீர் வசதி மற்றும் தூய்மை பணியினை நகராட்சி நிர்வாகம் மேற்கொள்ளவும், தீயனைப்புத்துறையினர் மாவட்ட கருவூலம் மற்றும் தேர்வுமையங்களில் எவ்வித அசம்பாவிதமும் நடைபெறாமல் இருக்க தடுக்கும் வகையில் தீயணைப்பு வண்டிகளை தயார் நிலையில் வைத்திருக்கவும் சம்பந்தப்பட்ட அலுவலர்களுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

மேலும் போக்குவரத்து துறையினர் தேர்வு நாளன்று தேர்வு மையங்கள் அமைந்துள்ள வழித்தடங்களில் தேவைக்கேற்ப கூடுதல் பேருந்து இயக்கவும், மின்சார வாரியம் தடையில்லா தொடர்மின்சார வசதி வழங்கவும், வருவாய்த்துறையினர் அனைத்து தேர்வுமையங்களுக்கு சென்று குடிநீர் வசதி, மின்சார வசதி, கழிப்பறை வசதி, தளவாட சாமான்கள் வசதி போன்ற பல்வேறு வசதிகளை ஆய்வு செய்யவும், தேர்வுகளில் முறைகேடுகளை தடுக்கும் வகையில் பறக்கும் படை, நடமாடும் கண்காணிப்புக்குழு, வீடியோ ஒளிப்பதிவு, வினாத்தாள்களை பாதுகாப்பாக கருவூலத்தில்

வைத்தல் மற்றும் தேர்வு மையங்களிலிருந்து விடைத்தாள்களை பாதுகாப்பாக மீண்டும் கருவூலத்தில் வைத்தல் போன்ற பல்வேறு பணிகளை சிறப்புடன் மேற்கொள்ள சம்பந்தப்பட்ட அலுவலர்களுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது. இதன் மூலம் புதுக்கோட்டை மாவட்டத்தில் குரூப்-4 தேர்வினை சிறப்பாக நடத்தும் வகையில் அனைத்து அலுவலர்களும் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டுமென்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ். இ.ஆ.ப., அவர்கள் பேசினார்.

இக்கூட்டத்தில் புதுக்கோட்டை சார் ஆட்சியர் செல்வி.கெ.எம்.சரயு இ.ஆ.ப., மாவட்ட ஆட்சியர் நேர்முக உதவியாளர் (பொது) (பொ) திருமதி.பஞ்சவர்ணம் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**